30th March 1961]

The Hon. Sri R. VENKATARAMAN : (அ) The Rural Co-operative Housing Scheme is not included in the Second Five-Year Plan. A sum of Rs. 15 lakhs was set apart for the Scheme from State funds during the Second Plan period.

(இ) Up to 31st January 1961, 306 houses were constructed at a total cost of Rs. 13·16 lakhs.

(உ) Out of the total provision of Rs. 15 lakhs made for the Second Plan period, a sum of Rs. 13·16 lakhs has been utilised up to 31st January 1961. As the balance of Rs. 1·84 lakhs was found to be inadequate to meet the demands of Rural Housing Societies during the remaining period, additional provision is included in the Budget.

Sri A. VEDARATHNAM : ரூரல் அவுசிங்குக்கு மத்திய அரசாங்கம் உதவி செய்வதில்லையா ? இந்த இனத்தில் நாம் முயற்சி செய்யாததால் உதவி கொடுக்கப்படவில்லையா ? அல்லது கேட்டும் அவர்களுக்குக் கொடுக்க இஷ்டமில்லையா ?

The Hon. Sri R. VENKATARAMAN : வில்லேஜ் அவுசிங் பிராஜக்ட் இருக்கிறது. அதற்கு மத்திய சர்க்கார் உதவியிருக்கிறது. ரூரல் அவுசிங் சொஸைடி என்று நாம் கூட்டுறவு சொஸைடிகள் ஏற்படுத்தி அவைகள் மூலம் சில வசதிகளைச் செய்து வருகிறோம். ஆகவே ரூரல் அவுசிங் சொஸைடி என்பது ஒன்று ; வில்லேஜ் அவுசிங் பிராஜக்ட் என்பது மற்றொன்று.

Srimathi A. S. PONNAMMAL : தலைவர் அவர்களே, இந்த வில்லேஜ் அவுசிங் பிராஜக்ட் என்பதற்கு மத்திய அரசாங்க உதவி இருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி இருந்தால், அது எந்த அளவில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும் இருந்தாலும் கூட இந்த வில்லேஜ் அவுசிங் பிராஜக்டுக்கு அரசாங்கம் 50 சதவிகிதம் உதவி செய்கிறது. 50 சதவிகிதம் கிராமத்திலுள்ளவர்கள் கொடுக்கவேண்டும். இப்படி இருக்கின்ற காரணத்தினால் அதைப் பயன்படுத்திக்கொள்ள கிராம மக்கள் முன்வரவில்லை. நமது ராஜ்ய சர்க்கார் இந்த 50 சதவிகிதம் என்பதை நம்முடைய கூட்டுறவு இலாகாவின் மூலமாக மேற்கொண்டு 30 சதவிகிதம் கொடுத்து, மொத்தத்தில் 80 சதவிகிதம் உதவித்தொகை கொடுத்து உதவி செய்கிறோம். இது கடந்த ஒரு ஆண்டு காலமாக கொடுத்துக்கொண்டு வரப்படுகிறது.

Retail price of rice

* 1200 *Q*.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. Minister for Home be pleased to place a statement detailing the retail price of rice for each month from January to December 1960 in the different centres of our State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : A statement [a] showing the retail price of rice for each month from January to December, 1960 in the different centres of our State is placed on the table of the House.

[a] Printed as Appendix VI on page 531 infra.

[30th March 1961

Sri M. KALYANASUNDARAM : கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரங்களிலிருந்து, விலைவாசி இறங்குவதற்கான அறி குறியே காணோம். அப்படி இருக்கும்போது, இந்த நியாய விலைக்கடைகள் திருச்சி ஜில்லாவில் மூடப்பட்டு, அங்குள்ள அரிசி மற்ற ஜில்லாக்களுக்குக் கூட மாற்றப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நியாய விலைக் கடைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. எவ்வளவு நாட்களுக்கு வைக்கப்பட வேண்டுமென்பதற்கெல்லாம் அந்தந்த மாவட்ட கலெக்டருக்கு விடப்பட்டிருக் கிறது. அவர்களுடைய யோசனையின்பேரில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மீண்டும் மீண்டும் கலெக்டர்களுக்கு அரசாங்கம் இதைப்பற்றி அறிவித்துக்கொண்டு தான் வருகிறது. இவ்வாறு திருச்சிக் கலெக்டருக்கும் சொல்லப்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு எத்தனை நியாய விலைக் கடைகளை தொடர்ந்து நடத்த வேண்டுமென்று புலப்படுகிறதோ, அந்த அளவுக்கு ஏப்ரல் மாதத்திலிருந்து தொடர்ந்து நடத்தலாம் என்றும் யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Sri K. VINAYAKAM : Sir, I have known days when eight full Madras Measures of Madras rice was sold for a rupee. May I know, Sir, would those happy days come back?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There is no use in indulging in old memories. There are so many things you could have enjoyed in those days.

Sri A. GOVINDASAMI : ஏற்கனவே நெசவாளர்களும், ஆதிதிராவிட மக்களும் நிறைய இருக்கிற பகுதிகளில் நியாய விலைக்கடை கள் அவசியம் என்பதை உணர்ந்து திறக்கப்பட்டு, இப்பொழுது மூடப்பட்டி ருக்கிற கடைகளை மீண்டும் திறக்கும்படி சர்க்கார் உத்தரவிடுவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட யோசனையை தங்கள் மாவட்ட கலெக்டர் அவர்களிடம் தெரிவித்தால் கலெக்டர் அதைக் கவனித்து வேண்டியதைச் செய்வார்.

Sri S. M. ANNAMALAI : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார். அமைச்சர்கள் சட்டமன்றத்தில் அடிக்கடி தவறான புள்ளி விவரங்கள் கொடுத்துக்கொண்டு வருகிறார்களே ; இப்பொழுது ஆகஸ்டு 9-ம் தேதி ஒரு புள்ளி விவரம் தரப்பட்டிருக்கிறது. அந்தப் புள்ளி விவரத்தையும், இப் பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரத்தையும் பார்த்தால் வித்தி யாசம் இருக்கிறது. அப்பொழுது தரப்பட்ட புள்ளி விவரப்படி பிப்ரவரி மாதத்திய விலை 92 நயா பைசா, இப்பொழுது தரப்பட்டிருக்கிற புள்ளி விவரப்படி சராசரி போட்டுப்பார்த்தால் 88 நயா பைசா. அதே மாதிரி அப்போது தரப்பட்ட புள்ளி விவரப்படி மார்ச் மாதத்திய விலை 95 நயா பைசா, இந்தப் புள்ளி விவரப்படி 88 நயா பைசா. ஏப்ரல் மாதத்திய விலை முன்பு கொடுத்த புள்ளி விவரப்படி 96 நயா பைசா, இப்பொழுது கொடுத்த புள்ளி விவரப்படி 93 நயா பைசா. இம்மாதிரி தவறான புள்ளி விவரம் கொடுப்பது நியாயமா ?

DEPUTY SPEAKER : இது பாயின்டு ஆப் ஆர்டர் அல்ல. அதைப்பற்றி தனிக் கேள்வி போடவேண்டும்.

Sri S. M. ANNAMALAI : சட்டமன்றத்தில் தவறான புள்ளி விவரம் கொடுக்கிறார்கள். அது சட்டமன்றத்தின் உரிமையை பாதிக்க வில்லையா ?

DEPUTY SPEAKER : தனிக் கேள்வி போடவேண்டும். I have already stated that it is not point of order. The hon. Member will please resume his seat.